*Available online at:* http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
*IJMASRI, Vol. 2, issue 1, pp. 249- 253, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

RESEARCH ARTICLE

# கலைஞர் உருவாக்கிய திராவிட கட்டிடக் கலை தமிழ்பண்பாட்டுக் கோட்டங்கள்

**ரசித்கான் அ**

*இணைப் பேராசிரியர், வரலாற்றுத்துறை, புதுக்கல்லூரி, சென்னை-14.*
*Mail: rasheedkhan2002@gmail.com*

**சுருக்கம்:**

ஐரோப்பியர்களின் ஏதென்ஸ், ரோம் நகரங்கள் கோல தமிழர்களுடைய பூம்புகாரில் பெருமையை வள்ளுவர் உலகம் அறிந்து கொள்ளும் வகையில் அதனை மீட்டுருவாக்கம் செய்து, புதிய தொழில்நுட்பத்தில் பழமையின் பெருமையை மீட்ட கலைஞர் தமிழரின் பழைய பாரம்பரிய திராவிடர் கட்டடக் கலை வடிவில் இருப்பதாம் நூற்றாண்டில் உருவாக்கினர் கோட்டங்களை. இளையசமுதாயம் பழையதை எழுத்தால் இருப்பதை நேரடி வரலாற்று காவியங்களாக தூண்டிட அமைக்கப்பட்டு இருப்பது சரித்திரம் அழியாமல் நினைவு கூறுவதும் இவற்றின் நோக்கமாகும்.

**முன்னுரை**

ஐரோப்பியர்களின் ஏதென்ஸ், ரோம் நகரங்கள் கோல தமிழர்களுடைய பூம்புகாரில் பெருமையை வள்ளுவர் உலகம் அறிந்து கொள்ளும் வகையில் அதனை மீட்டுருவாக்கம் செய்து, புதிய தொழில்நுட்பத்தில் பழமையின் பெருமையை மீட்ட கலைஞர் தமிழரின் பழைய பாரம்பரிய திராவிடர் கட்டடக் கலை வடிவில் இருப்பதாம் நூற்றாண்டில் உருவாக்கினர் கோட்டங்களை. இளையசமுதாயம் பழையதை எழுத்தால் இருப்பதை நேரடி வரலாற்று காவியங்களாக தூண்டிட அமைக்கப்பட்டு இருப்பது சரித்திரம் அழியாமல் நினைவு கூறுவதும் இவற்றின் நோக்கமாகும்.

**கோட்டம்- பொருள்:**

சிலப்பதிகாரக் காலத்தில் இளைஞர்களுக்கு எழுப்பப்பட்ட ஆலயங்கள் 'கோட்டம்'' என்ற பெயரால் வழங்கின.

அமரர் தருக்கோட்டம், வெள்யானைக் கோட்டம், ஊர்க்கோட்டம், வேற்கோட்டம், உச்சிகிழான் கோட்டம், புறம்பண்ணையான் வாழ்கோட்டம், நிக்கந்தர் கோட்டம், நிலாக் கோட்டம்.

சிலப்பதிகார உரையாசிரியர்களில் அரும்பாத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் "கைலாயம் நிற்கும் கோயில்'' என்று பொருள் எழுதுகின்றனர். இதனை காண்கையில் கோட்டம் என்பது கோயில் என அறியலாம். வள்ளுவருக்கு ஸ்ரீநூலிய கோயிலைக் கலைஞர் பண்டைக்கால சிலப்பதிகார மரப்புப்படி 'கோட்டம்'' என வழங்கினார் எனக் கொள்ளலாம்.[1]

சோழநாட்டின் தலைநகரங்களில் ஒன்றாக காவிரிப் பூம்பட்டிணம் என்கிற பூம்புகார் இருந்தது. கடல் கொண்ட தமிழரின் நகரங்களில் அதுவும் ஒன்று.

காவிரிப்பூம்பட்டிணம் கலை வளர்க்கும் நகரமாகவும், பொன்னாலான தோரணம்கட்டி பொலிவுடன் திகழச் செய்தனர். கண்ணகியும்

கோவலனும் வாழ்ந்த ஊர் அந்த ஊரின் சிறப்பை உலகறிய வேண்டும். முன்னோர் பெருமை அடுத்து வரும் தலைமுறைகள் உணர வேண்டும் என்பதற்காகவே கலைஞர் பூம்புகாருக்கு புது பொலிவு+ட்ட முனைந்தார்.[2]

காவிரி பூம்பட்டிணம் மூன்று பிரிவுகளாக விளங்கியது. கடற்கரை ஓரமாக அமைந்த பகுதி மருவு+ர்பாக்கம். நகராக அமைந்த பகுதி பட்டிணம்பாக்கம். இரண்டிற்கும் இடையே அமைந்த பகுதி நாளங்காடி. கரிகால்சோழன் காலத்தில் தயார் காவிரிப்பு+ம்பட்டிணம் சிறப்போடு விளங்கியது. வடபுலத்துப் படையெடுப்பு முடித்துத் திருப்பியதும், திறையாகவும், பரிசாகவும் பெற்றுவந்த முத்துப்பந்தரையும், தோரணவாயிலையும் கொண்டு அமைந்த கொலு மண்டபம், புலவர்கள் பாடும் பட்டிமண்டபம்.

பட்டிணப்பாக்கத்தில் வௌ;ளிடைமன்றம், இலஞ்சிமன்றம், நெடுங்கல் மன்றம், பூதச்சதுக்கம், பாவை மன்றம் என்றும் ஐவகை மன்றங்கள் இருந்தன. இவைகளெல்லாம் அமையப்பெற்ற பு+ம்புகார் காலத்தின் கோலத்தால் கடற்கோளுக்கு இரையாகி, மறைந்த நகரங்களில் ஒன்றாகிவிட்டது.[3]

**கலைஞருக்கு தோன்றிய எண்ணம்**

காவிரிப்பூம்பட்டிணத்தை மீண்டும் தமிழ்நாடு மக்கள் பார்க்க கூடிய காலம் வராது. அதனுடைய மாதிரியையாவது காணக்கூடிய காலம் வராதா? என்று என்னுடைய மாணவ பருவத்தில் உள்ளம் ஏங்கியது. அந்த மாணவன் தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஒரு காலத்தில் வருவார் என்றோ அந்த கனவு பு+ம்புகாராக உருவாகியிருக்கிறது என்றே எண்ணிடவில்லை என்கிறார் கலைஞர் மு.கருணாநிதி.[4]

திரைப்படத்தில் கண்ணகி-கோவலன் கதையை தனது தமிழால் வெளிப்படுத்திய கலைஞரின் பேனா தி.மு.க. ஆட்சியில் பூம்புகாரை உருவாக்கம் செய்யக் கையெழுத்திட்டது. இலக்கியத்தில் குறிப்பிடபட்டிருந்த அந்த காலப் பூம்புகாரில் அடையாளங்களாக கலைஞரின் பேனா கோடுகளாக வரைந்து காட்ட அவற்றை உயிரூட்டமுள்ள படைப்பாக மாற்றினார். சிற்பி கணபதி ஸ்தபதி.

பூம்புகாரில் ஏழுநிலைமாடம் அமைக்கப்பட்டது. அதன் உள்புறத்தில் சிலப்பதிகாரத்தை பார்வையாளர்களுக்கு புரியும் வகையில் சிற்பங்களை உருவாக்கினார். கண்ணகிக்கும், மாதவிக்கும் அவர்களின் உருவத்தை சிலைமகளாக வடிக்கப்பட்டனர். இளங்கோவடிகளுக்கும் சோழமன்னன் கரிகாலனுக்கும் சிலைகள் அமைக்கப்பட்டன.

பாவை மற்றும் சிலம்பு மண்டபம், நெடுங்கல் மன்றம், தோரணவாயில்கள் என சிலப்பதிகாரம் சிறப்பித்துக் கூறும் இடங்கள்யாவும் புதிதாக உருவாக்கப்பட்டன.

சிலப்பதிகார வரலாற்றுச் செய்திகளையும் காட்சிகளாக்கி காட்டிய செயல் தமிழக கலை வரலாற்றில் இலக்கிய காட்சிகளுக்கும், உலகியல் வாழ்க்கை நெறிகளுக்கும் வரலாற்றில் முதன் முதலில் சிற்பக் காட்சிகளைக் கல்லால் அமைந்திடக் கிடைத்திட்ட சந்தர்ப்பத்தை சிற்பிகளாகிய நாங்கள் பெரியதொரு புரட்சியாக கூட நினைத்தது உண்டு என்று வை.கணபதி ஸ்தபகி குறிப்பிடுகிறார். 1973ம் ஆண்டு இந்திர விழா நடந்த சித்திரைப் பௌர்ணமியில் எழுநிலை மாடமனை கலைக்கூடம் திறந்து வைக்கப்பட்டது.[5]

சிலப்பதிகாரத்திற்கு ஆற்றிய அளப்பரிய சேவைக்காக 'இளங்கோ விருது" 'பூம்புகார் சிற்பி" எனும் பட்டம் ஆகியவற்றை, சென்னையில் 2014ம் ஆண்டு நடைபெற்ற சிலப்பதிகார மாநாட்டில் கலைஞருக்கு வழங்கப்பட்டது.

**திருவள்ளுவர் பிறப்பு**

மயிலாப்பு+ரில் மதுரையிலே கன்னியாகுமரி நாயினார் குடியில் பிறந்தவர் என்பதாகும் உளர். திருவள்ளுவர் ஆதி என்ற புலைச்சிக்கும் பகவன் என்ற பிராமணனுக்கும் பிறந்தவர் எனப் பிற்கால புராணங்கள் கூறுகின்றன.

திருவள்ளுவருடைய மனைவி வாசுகி என்றும், நண்பர் 'ஏலேலசிங்கர்" என்று கூறும் கதை மரபுகள் உண்டு இவற்றிற்கு சான்றாதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

தமிழர்களுக்கென ஒரு காலக்;கணக்கீடு வேண்டும் என நினைத்த தமிழ்ச் சான்றோர்கள் திருவள்ளுவர் காலத்தையே தமிழர்குரிய காலக் கணக்கீடாக கொண்ட கி.மு. 31ல் தொடங்குவதாகவும் கொண்டனர். இதனையே தற்போது திருவள்ளுவர் ஆண்டாக நாம் கணக்கிட்டு வருகின்றோம்.

**சிறைக்கோட்டம் அறக்கோட்டமாதல்**

1953ஆம் ஆண்டு கல்லக்குடிப் போராட்டத்தின் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டுச் சிறைசென்றார் டாக்டர் கலைஞர். அங்குப் பேச்சு மன்றத்தை உருவாக்கினார்கள். கைதிகளாக இருந்தவர்கள் பல்வேறு பொருள்களைப் பற்றிப் பேசினர். பின்னர், அவர்கள் பேச்சு திருக்குறளாக மாறியது. இரண்டு மூன்று நாள்கள் திருக்குறள் தொடர்பான பேச்சுகள் தொடர்ந்தன. இறுதியில் டாக்டர் கலைஞர் அவர்கள் நிறைவுரை வழங்கினார்கள். திருக்குறளின் அருமை பெருமைகளை எடுத்துரைத்த டாக்டர் கலைஞர் அவர்கள் காமத்துப்பால் குறள்கள் சிலவற்றை முன்வைத்து உரையாற்றினார்கள்.

சிறையில் இருந்தவர்கள் சிறையில் இருப்பதையும் மறந்து டாக்டர் கலைஞர் அவர்களின் விளக்கங்களை மெய்மறந்து கேட்டனர்.

சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை என மணிமேகலையில் ஒரு காதை உண்டு, அப்படி, இருப்பதாம் நூற்றாண்டில் சிறைக்கோட்டத்தை திருக்குறள் அறக்கோட்டம் ஆக்கிய பெருமை டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. இப்படிச் சிறைக்கோட்டங்களைத் திருக்குறள் வழியில் அறக்கோட்டங்கள் ஆக்கலாமே என்ற எண்ணம் கனவு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தோன்றியிருக்க வாய்ப்புண்டு.[6] அதன் எதிரொலிதான் உலகத் திருக்குறள் மையம் தொடங்கிச் சிறைச்சாலைகளில் திருக்குறள் வகுப்புகள் நடத்த நாங்கள் அனுமதி கேட்டபோது, தமிழக அரசு உடனே அனுமதி வழங்கியது.

சென்னையிலே வேணுகோபால சர்மா என்ற ஒருவர் இருந்தார். அந்த வேணுகோபால் சர்மா நல்ல ஓவியர். அவரை நாடி எங்களுக்கு பிரச்சனை இல்லாத திருவள்ளுவருடைய படம் வேண்டும் என்று கேட்டோம். அவரிடத்திலே அளவு பற்றி பேசிய அண்ணா அவர்களும் இயக்கத்தவர்களும் கி.ஆ. பெ.விசுவநாதன் போன்ற தமிழ் அறிஞர்களும் பேசினோம்.[7]

வேணுகோபால் சர்மா ஒரு படத்தை வரைந்து இதுதான் நான் காணுகின்ற திருவள்ளுவர் என்னுடைய கற்பனைக்கு எட்டிய திருவள்ளுவர் இவர்தாம் என்று வள்ளுவர் படம் ஒன்றை வரைந்து காட்டினார்.

1973ம் ஆண்டு திருமயிலை திருவள்ளுவர் நினைவாலய திருப்பணியை கலைஞர் நிறைவேற்றினார். நவம்பர் 13ல் நெல்லை திருவள்ளுவர் மேம்பாலம் ஈரோடுக்குப் பாலமாக அமைந்திருப்பது வியக்கத்தக்கது. திருக்குறளின் மேலடுக்கு நான்கு சீராகவும், கீழடுக்கு முச்சீராகவும் அமைந்துள்ளன. திருவள்ளுவர் மேம்பாலம் ஆசியாவிலேயே முற்றிலும் புதிய முறையில் அமைந்த வள்ளுவர் கருத்தை மக்கள் அறியத்தூண்டியிருக்கிறது.

**வள்ளுவர் கோட்டம் அமைந்த வரலாறு**

சிலப்பதிகாரம் கலைக்கூடம் வேலை நினைவுபெற்ற உடன், 'வேலை வேலை" தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை மாமல்லபுரச் சிற்பக்கல்லூரி மாணவர்கள் கோரிக்கை வைத்தனர். 'மாமல்லபுரம் மாணவர்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவும் வள்ளுவருக்கு அழியாத நினைவுச் சின்னம் அமைத்திடவும் 'கோட்டம்" அமைகிறது என்றார் கலைஞர்.

வள்ளுவராண்டு 2005 புரட்டாசித் திங்கள் 2ஆம் நாள் (18.09.1974) புதன்கிழமை அன்று மாலை 5 மணிக்கு வள்ளுவர் கோட்டத்துக்கு கால்கோள் விழா நடைபெற்றது. முதலமைச்சர் மு.கருணாநிதி வள்ளுவர் கோட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டிச் சிற்பப் பணிகளைத் தொடங்கி வைத்தார். மொழிஞாயிறு நா.தேவநேயப்பாவணார் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதன் கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன், பேராசிரயர் க.அன்பழகன், கலைஞர் சிற்றுள் பிடித்து சிற்ப வேலையைத் தொடங்கி வைத்ததும் சிற்பிகள் ஒரே நேரத்தில் இருநூறு உளிகள் எழுப்பிய ஓசை கணீர் கணீர் என்று விண்ணதிரச் செய்தது. கணபதி ஸ்தபதி, சிற்பிகள் ஜனாகிராமன் ஸ்தபதி, எஸ்.கே.ஆச்சாரியார் ஆகியோர் மேற்பார்வையில் நடைபெற்றது.

தேரில் வள்ளுவரின் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இக்கருவரை பூமியிலிருந்து 30 அடி உயரத்தில் அமைந்துள்ளது. 40 அடி அகலமான எண் கோணவடிவில் கட்டப்பட்டுள்ளது. கருவரை வாயிலில் திராவிடக் கட்டிடக் கலையை நினைவு+ட்டும் வகையில் தூண்கள் உள்ளன.

குறளின் பொருளை விளக்கும் சிற்பம் இடம் பெற்றுள்ளது. சிற்பத்திற்கு கீழ் அது எந்த அதிகாரத்திற்கு என்பதைக் குறிக்கும் வகையில் அதிகாரப் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. 1330 குறள்களுக்கு பொருள் விளக்கம் அளிக்கும் அழகிய சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. அவை உயிரோவியங்களால் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

கல்லில் வடிக்கப்பட்ட தேர் அசையாது என்பது கலைஞருக்கு தெரியும் அதனால் தான் துணிந்தோரணங்களைக் தொங்கவிட்டார். தேரை அண்ணாந்து பார்க்கும் போது காற்றில் அசையும் தோரணங்கள் வானவீதியில் தேரோட்டம் நடப்பது போன்ற உணர்வு தரும் அதுபோலவே வள்ளுவர் கோட்டத்தின் மேல்தளத்தில் மழைநீர் தேங்கியிருக்கும்போது அதில் விழும் தேரின் நீர், நீரலைகளில் அசையும் காட்சி திருவாரூர் தேரோட்டம் போலவே இருக்கும்.

இரண்டு யானைகள் 128 அடி தேரை இழுப்பது போல் வெளிப்புற வடிவமைப்பும், தேருக்குள் இருக்கும் கருவறையில் வள்ளுவர் சிலையும், அச்சிலை முப்பாலைக் குறிக்கும் வகையில் மூன்று விரல்களை முத்திரையாகக் காட்டும் விதத்திலும் அமைந்திருக்கும்.

தேரின் முன்புறத்தில் 4 ஆயிரம் மக்களைக் கையாளும் திறன் கொண்ட அரங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாதம் ஒருமுறை திருக்குறள் சார்ந்த நிகழ்வுகள் நடக்கும் விதத்தில் அவ்வரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. அரங்கத்தின் ஒரு பகுதியாக 'குறள்மணிமாடம்" இருக்கிறது இங்கு 1330 குறள்கள் கற்பலகைகளில் செதுக்கி பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

அரங்கத்தை சுற்றி குறள் கருத்துக்களை கொண்ட ஓவியங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

வள்ளுவர் கோட்டம் ஒருவகையாகக் கட்டி முடிக்கப்பட்டது. 15.04.1976 அன்று ஏதோ பெயருக்கு வள்ளுவர் கோட்டத் திறப்பு விழா நடைபெற்றது. அன்று இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்த மாண்புமிகு பக்ரூதீன் அலி அகமது அவர்கள் வள்ளுவர் கோட்டத்தைத் திறந்து வைத்தார்கள். மேதகு முன்னாள் ஆளுநர் கே.கே.ஷா அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

உலகமே வியக்கும் வண்ணம் நடைபெற இருந்த வள்ளுவர் கோட்டத் திறப்பு விழா சடங்கிற்காகத் திறந்து வைக்கப்பட்டது. ஓராயிரம் கனவுகளோடு வள்ளுவர் கோட்டத்தை அங்குலம் அங்குலமாகப் பார்த்துப் பார்த்துக் கட்டிய டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த விழாவிற்கு முறைப்படி அழைக்கப்படவில்லை. டாக்டர் கலைஞர் அவர்கள் வள்ளுவர் கோட்டத்திற்கு அடிக்கல் நாட்டியபோது திறந்து வைக்கப்பட்ட கல்வெட்டையும் அப்புறப்படுத்தி மறைத்து வைத்துவிட்டார்கள். வள்ளுவர் கோட்டத் திறப்பு விழா அன்று மாண்பமை டாக்டர் கலைஞர் அவர்கள் முரசொலியில் தீட்டியிருந்த 'கோட்டம் திறக்கப்படுகிறது. குறளோவியம் தீட்டப்படுகிறது" என்னும் மடல், படித்தவர் உள்ளங்களை எல்லாம் உருக வைத்தது.[8]

திருக்குறள் சுவடி பொதிந்த வண்ணக்கொடியினை ஏந்திட திருக்குறளில் உள்ள 1330 குறட்பாக்கள் விளக்கும் வகையில், 1330 மாணவர்கள், 1330 மாணவிகள், 1330 ஆசிரியர்கள், 1330 ஆசிரியைகள் திறப்பு விழா ஊர்வலத்தில் பங்கு கொள்வார்கள். இக்குறளின் முப்பாலை எடுத்துக் காட்டும் வகையில் தஞ்சை முத்துபல்லாக்குகள் மூன்றில் திருக்குறள் சுவடி வைத்து ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படும். ஊர்வலத்தின் முகப்பில் 13 யானைகளும் 133 குறள் அதிகாரங்களை விளங்கும் வகையில் 133 குதிரைகளில் வீரர்களும் அமர்ந்து செல்வார்கள். அலங்கார வண்டிகளில் திருக்குறள் சிற்பங்கள் மட்டுமின்றி தமிழ்நாட்டு கலைநிகழ்ச்சிகள் இசை நிகழ்ச்சிகள் கிராமிய நடனங்கள் பொய்க்கால்குதிரை நாதஸ்வரக் கச்சேரிகள் போன்றவைகள் இடம்பெறும் என்று முடிவெடுக்கப்பட்டது.[9]

அண்ணாசிலையை நிறுவ முடிவு செய்து அதற்கு அண்ணாசாலையில் இடம் ஒதுக்குமாறு அப்போதைய முதல்வரிடம் கோரிக்கை வைத்தார் கலைஞர். ஆனால் வள்ளுவர் கோட்டம் எதிரே அண்ணாசிலை வைக்க அனுமதி தரப்பட்டது. இதை தனக்கு சாதகமாக்கி வள்ளுவர் கோட்டம் நுழைவாயில் அருகே அண்ணாசிலையைத் திறந்தார் கலைஞர் மு.கருணாநிதி. அதிலே சீலையின் மடத்திலே சிலை திறப்பாளர், வள்ளுவர் கோட்டம் கண்ட கலைஞர் கருணாநிதி என்று கல்வெட்டில் பொதித்து வைத்தார். வள்ளுவர் கோட்டம் கட்டியது கலைஞர் மு.கருணாநிதி என்று பதிவு செய்தார்.

வள்ளுவர் கோட்டம் சேர, சோழ, பாண்டியர்களான மூவேந்தரும் சிந்திக்காத ஒன்று. முதலில் சிந்தித்தவர் கலைஞர்;. இந்த சிந்தனை இரண்டாயிரம் ஆண்டுகளைப் பின்னுக்கு தள்ளி முந்திக் கொண்ட ஒன்றாகும். முதலாம் நூற்றாண்டிலேயே சிந்திக்க வேண்டியவர்கள் சிந்திக்க தவறிவிட்டார்கள். கலைஞர் மு.கருணாநிதி இருபதாம் நூற்றாண்டை சேர்ந்தவர் எனினும் முன்னோர்களையெல்லாம் பின்னுக்கு தள்ளி முதலாமவராக ஆகிவிட்டார். கடவுளையும் மன்னனையும் மட்டுமே தேரிலே வைத்துக் காண்பவர்கள், அதற்கு மாறாக ஒரு புலவனை ஓர் அறிஞ்ஞனைத் தேரில் ஏற்றி வைத்துக் கண்டு மகிழ்ந்திருக்கிறார் கலைஞர் என்றார் கவிஞர் சுரதா.

## முடிவுரை

பாரம்பரிய பண்பாட்டு வரலாற்று சின்னங்களை தற்பொழுது உள்ள அரசு புணரமைப்புப் பணிகள் வள்ளுவர் கோட்டத்தில் மேற்கொண்டு வருகிறது. பழுதடைந்த கான்கிரிட் தூண்கள் புனரமைத்தல், குறள்மணி மாடம்புதுப்பித்தல், குளிரூட்டப்பட்ட நவீன உள்ளரங்கம், திருக்குறள் ஆய்வு மையம் அதுபோல கண்ணகி கோட்டத்தில் அதன் நிலை மாறாமல் இருந்து அரசு பணிகளை மேற்கொண்டு பண்பாடு-கலாச்சாரம் காக்கப்பட வேண்டும் என்பதே இவ்வாய்வின் கருத்து.

## அடிக்குறிப்பு


1. ந.வெங்கடேசன், கலைஞர் சட்டமன்ற உறைநயம், காந்தி பதிப்பகம், தஞ்சாவு+ர் மாவட்டம், முதல் பதிப்பு - ஏப்ரல் 2007.
2. சி.எஸ்.தேவநாதன், காவியத் தலைவர் கலைஞர், கவிதா பப்ளிகேஷன்ஸ், தி.நகர், சென்னை, பதிப்பு - ஜுன் 2022.
3. முரசொலி, 10.03.2010, ப.1.
4. கௌமாரீஸ்வரி, கல்வி நிலையங்களில் கலைஞர் பாகம்-1, பக்கம்-347, சீதைப் பதிப்பகம், சென்னை-5, பதிப்பு - ஜுலை 2010.
5. காயத்திரி சண்முகவேலன், பொன்னி செல்வநாதன், டாக்டர் கலைஞர் அவர்களின்

சிறப்பத்துறை சாதனை மலர், பக்கம்-68, பதிப்பு - 2000.

6. முனைவர். கு. மோகனராசு, டாக்டர் கலைஞர் அவர்கள் கண்ட திருக்குறள் கனவுகள், மாணிக்கவாசகர் பதிப்பகம், பக்கம்-17, வெளியீடு 12.08.2021.

7. கௌமாரீஸ்வரி, கல்வி நிலையங்களில் கலைஞர் பாகம்-2, பக்கம்-1307, சீதைப் பதிப்பகம், சென்னை-5, பதிப்பு - ஜுலை 2010.

8. முரசொலி (பாசறை), 10.10.2023, ப.12.முனைவர் லு. புருனோ சந்திரசேகர், கலைஞர் மு. கருணாநிதி நெஞ்சுக்கு நீதி ஒரு அறிமுகம், கருஞ்சட்டை பதிப்பகம், சென்னை, ப.310. முதல் பதிப்பு - 2021.

*****